உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அசாம்பிரதாய நிரசன நிர்த்தூளி.

இஃது,

மஹாகனம்பொருந்திய,

விரிஞ்சபுரம்,

நீலகண்டசாஸ்திரியாரவர்கள்,

தருமபுரம்,

சைவத்தம்பிரான்சுவாமிகள்,

தென்னாட்டு,

இராமலிங்க ஓதுவான் மூர்த்திகளின் உதவியால்,

சைவசாம்பிரதாயங்களைத்தழுவிப்பேசவல்ல,

புராணீகர்

பொன்னேரி - சுந்தரம்பிள்ளையவர்களால்,

இயற்றப்பட்டு,

சென்னை:

கோமளீச்சுரன்பேட்டை - சாமிசெட்டிவீதியில்,

திருத்தொண்டர்சபைத்தலைவர்களாகிய,

சி. வெங்கடாசலமுதலியார், கோ. நே. கன்னியப்பஆசாரியார்

கோ. உருத்திரப்பஆசாரியார் - ஆகிய இவர்களால்,

சென்னை மவுண்டுரோட்டு,

கார்டியன் முத்திராக்ஷரசாலையென்னும் அச்சுக்கூடத்திற்,

பதிப்பிக்கப்பட்டன.

பவ௵ கார்த்திகை௴.

இதன் விலை - அணா ௨.

Madras:

PRINTED AT THE GUARDIAN PRESS,

NO. 4, MOUNT ROAD.

1874.

P.A.C.M.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சற்குருவேநமஃ.

# அசாம்பிரதாய நிரசன நிர்த்தூளி சரித்திரச்சுருக்கம்.

தென்னாடுகள் - பலவற்றினுஞ் சிறந்து விளங்குகின்ற சோழமண்டலத்திலேயுள்ள - திருப்பூம்புகலூரில் - வர்த்தமானீச்சுரம் என்னுமாலயத்துள் - ஓர்புறத்தில் சிவலிங்கப்பெருமான் - சிங்கமுகங்கொண்டிருக்கிற வுண்மைவரலாறு.

அசாம்பிரதாய நிரசனநிர்த்தூளிஎன்னும் இந்நூலுக்கு இங்ஙனம்பொருளுரைக்கின்றனன் - அதாவது சாம்பிரதாயத்தைப்போக்க - அசாம்பிரதாயநிரசனம் என்னும் ஓர் சிறுநூல் வெளிகண்டதனால், அதையுருக்காணாமல் - அதமாக்கும்பொருட்டு நிர்த்தூளியென்னும்பொருளை ஒற்றுமையாகக் கொண்டதாகும்.

சற்சாம்பிரதாயப்படி குருவினிடம் ஆதீனவித்துவான்களினிடங் கேட்டுணர்ந்தவுண்மையினாலும், அப்பர்சுவாமிகளை சிவபெருமான் சிங்கமுகங்கொண்டு ஐக்கிய மாக்கினாரென்று பொருளுரைத்தனன். அதற்குமாறாக - ஒரு அசாம்பிரதாயர் பிரமாணமில்லாமல் மறுத்ததனால், பின்னும் - விசாரணையில் சிவபெருமான் சிங்கமுகங்கொண்டு அப்பர்சுவாமிகளை ஐக்கியமாக்கியது - சத்தியம், சத்தியமென்று பொருளுரைத்தபுண்ணியனை - இதனடியிற்காண்க

வினு.—மதுரை ஆதீனந்திருஞானசம்பந்தசுவாமிகள் திருமடத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற சைவபண்டார சந்நிதியாகிய மகாமூர்த்திகளது திருமுகவோலக்கத்தில் தேவாரங்களைப்பண்ணுடன் ஓதிக்கொண்டு சந்நிதியில் நடக்கப்பட்ட பெரியபுராண சரித்திரங்களை சாம்பிரதாயத்துடன் கேட்டுத் தெளிந்து - வாழ்ந்திருந்ததுமல்லாமல், திருவாவடுதுறை தருமபுரவாதீனங்களிலும்போய்ப்பழகி - திருமணநல்லூர், திருப்பூம்புகலூர், முதலிய ஸ்தலயாத்திரைகள்செய்து, அந்த அந்த க்ஷேத்திரவிசேஷங்களைக்கண்டும், கேட்டும், இப்போது சென்னையில் - இருபதுவருடகாலமாய் வாசஞ்செய்யுங்காலத்து சில ஆண்டிற்குமுன் வித்துவான் காஞ்சீபுரம். சபாபதிமுதலியாரவர்கள் திருவாரூர் - சைவத் தியாகராசபண்டாரமூர்த்திகளிடத்திற் பெரியபுராணந் திருவாசகம், பாடங்கேட்டபடி சென்னையில் - திருவண்ணுமலைமடாலயத்தில் - பெரியபுராணஞ்சொன்னகாலத்தில் அச்சபையில் தேவாரங்களைப் பண்ணுடன் ஓதிநின்றவரும், அகத்தியமகாமுனிவர் திரட்டியருளிய - தேவாரத்திரட்டை பண்களின்படிபாசுரங்களின்தலைகள் பிரிக்கப்பட்டவருமாகிய - தென்னுட்டுப்பூரணச்சைவர் - இராமலிங்கவோதுவான்மூர்த்தியவர்களை யான் ஒருகால்கண்டு வார்த்தையாடுங்காலத்து சிங்கமுகவிபரங்கேட்க.

விடை.—அவ்வோதுவார் "சிங்கமேயுன்னடிக்கே போதுகின்றேன் றிருப்புகலூர்மேவிய தேவதேவே" என்னுந்தேவாரத்தில் - சிங்கமேஎன்றதற்குப்பொருள் - சிங்கமுகங்கொண்ட கடவுளேஎன்றும், இதுவே ஸ்தலபுராண சாம்பிரதாய ஐதீகமென்று முறைத்தனர். அதுநிற்க, திருப்பூம்புகலூரில் அப்பர்சுவாமிகள் திருநக்ஷத்திரமாகிய சித்திரைச்சதையத்தில் இப்போதும் அவ்வாலயத்துள் நடந்துவருகின்ற ஐதீகமாவது நமது அப்பர்சுவாமிகளை எழுந்தருளப்பண்ணி பதிகமோதிநின்றவுடன் - அவரை - மூலஸ்தானத்தில் எழுந்தருளச்செய்யுங்கால் - சிங்கமுக ஐதீக ஐக்கியத்தையொட்டித் தீப்பந்தங்களை ஒவ்வொன்றாகக் குறைத்துக்கொண்டே ஒன்றுடன்

போய் அவ்வொன்றும்இல்லாமல் திருக்காப்பிட்டு வெளிப்படு கின்றார்கள். அதாவது, அப்பர்சுவாமிகள் சிங்கமுகத்தில ஐக்கியமானார்என்பது. இன்னும், ஆதீனத்தார்களும் வழங்கி வருகின்றார்கள் - என்றனர்.

வினா.—சென்னைக் கோமளீச்சுரன்பேட்டையில் - திருத்தொண்டர்சபையில்— "சிங்கமேயுன்னடிக்கே போதுகின்றேன்" என்பதற்குப்பொருள் - பெரியோர்களாலும், ஆதீன வித்துவான்களாலுஞ், சிவரகசியங்களையறிந்த மகானுபவர்களாலுஞ் சொல்லக்கேட்டபடி தங்கள் அபிப்பிராயம் ஒத்ததுபோலவே யானுரைக்க அதுகேட்ட சில பாலியச்சிறுவர்கள், இச்சென்னையில் - தம்மனம்போனபடி பொருளுரைக்கின்றனர் என்றுவினவ.

விடை.—மேற்கண்ட ஓதுவான்மூர்த்திகள் நகைத்துச் சொன்னதாவது ; இச்சென்னையில் தியாகராசகவிராசர் சைவ புராணங்களில் கிஞ்சித்துப்பழக்கமுடையவர் - அவரைச்சில வாண்டிற்குமுன் ஒருவர் "அகத்தியத்திரட்டென்று வழங்குவது என்னென்றுகேட்க" அதற்கு அவர் பொருளுரைத்தது.

அகத்தியந்திரட்டி சம்பந்தர்தகப்பனாருக்குக் கொடுத்ததனால் அகத்தியத்திரட்டென ஆயிற்றென்று, பொருள் செய்தபின் அறிஞர்அச்சில்வெளியிட்டபிறகு, அகத்தியராற்றிரட்டப்பட்டது அகத்தியத்திரட்டென்று பொருளறிந்து சொல்ல வல்லவராயினர். சென்னையில் சில வித்துவான்கள் ஆழ்ந்த கருத்து உடையவர்களாகியுங், கருத்தறிந்து பொருளுரைக்க வல்லவர்களாகியும், இருக்கின்றனர். அநேகர் மேற்கண்டபடி விபரீதப்பொருள்செய்து அறிந்துக்கொள்ளாதவர்களாய் இருக்கின்றனர். காஞ்சீபுரம் - வித்துவான் சபாபதிமுதலியாரவர்கள் - சாம்பிரதாயப் பொருள்வழி தெரிந்தவர் - அவர் ; தம் மாணாக்கர்களுக்குஞ் சைவ ஞாய இரகசியங்களைச் சொல்லத் துணியாதவர், அப்படிசொல்லியிருந்தால் இவ்வளவு சந்தேகத்தை யடையமாட்டார்கள்என்றுஞ் சொல்லினர்.

அதுநிற்க - திருந்துதேவன்குடிஎன்னும் ஸ்தலத்தில் - சிவபெருமானை ஆணலவன்பூசித்த ஐதீகம்விளங்க - இப்போதுஞ் சிவலிங்கப்பெருமான்றிருமுடியில் அவ்வலவன் வளைபோல் ஒன்றிருக்கின்றது. இக்காலத்தும் அன்பர்கள் அன்புகொண்டு - பால் அபிஷேகஞ்செய்தால், அவ்வலவன்போல் ஒன்று அவ்வளையினின்று எழுந்து தோன்றிமறைந்துநிற்பது, இன்னுங்காணலாம் என்றனர்.

(திருவிளையாடற்புராணங்கீரனைக் கரையேற்றியபடலம்.)

நற்கீரதேவர் துதி.

விருத்தம்.

பருங்கைமால் யானையேனம் பாய்புலி யரிமான்மீனை *
யிருங்குறள் யாமைகொண்ட விகல்வலி கடந்தாய்போற்றி *
குரங்குபாம் பெறும்புநாரை கோழியா ணலவன்றேரை *
கருங்குரீஇக் கழுகினன்புக் கிரங்கிய கருணைபோற்றி (உக)

ஆணலவன் - ஞண்டு.

என்பதில் - ஆணலவன்பூசித்தகாரணமறிக.

மேற்கண்ட அற்புதத்தை உள்ளயாவருமே கண்டுணர்ந்திருப்பார்களோ - இல்லை, அதுபோல் - சிவரகசியங்கள் அநேகமுள - ஆகிலும், இலக்கணஇலக்கியம் முழுதுமுணர்ந்தகாலத்தும் - இவ்வுளவுகள் அறிவது அரிது! அரிது!! இவை விசாரணையினால் விளங்கவேண்டுவதென்றே முடித்தனர்.

இதன்றியில் - திருவாரூரில் முன்குறித்த சைவத் தியாகராசஓதுவார் பண்டாரம் ஐயா, அவர்கள் பரம்பரையில் வந்த சந்ததியார்கள்சொற்படி - பவ௵ ஐப்பசி௴ உ௩உ திருவாரூரிலிருந்துவந்திருக்கின்ற தபால் கடிதத்திலுள்ள உண்மை வசனமாவது - திருப்பூம்புகலூரில்சிவலிங்கப்பெருமான் சிங்கமுகங்கொண்டு அப்பர்சுவாமிகளைவிழுங்கி ஐக்கியஞ்செய்துக்

கொண்டதும்உண்மையே? அந்தச் சிங்கமுகரூபத்துடன்ஒரு மகாலிங்கம்அத்தலஆலயத்துள்ஓர்புறத்தில்இன்றும்இருப்பது உண்மையே? அவ்வாலயமண்டபத்தில் எழுதியிருப்பதும் உண்மையே? அதுநிற்க இக்காலத்திலும் அப்பர்சுவாமிகள் அடைந்தவண்ணந் தரிசனஞ் செய்யவேண்டுமானால், உண்மையாய்நம்பி ஒருநிறமுள்ளபசுவின்பால் - ஒருதினத்தில் நூற்றிருபத்தைங்கலங்கொண்டுஅபிஷேகஞ்செய்தாலின்றுங்காணலாம் என்பதுண்மையே?

அதுநிற்க - சிக்கல் கீழ்வேளூரிலிருந்துவந்த - தபாற்கடிதத்தால் பதிங்கலப்பால் அபிஷேகம்என்றும், எண்பது வருடத்திற்குமுன்பு - ஒருபெரியவர் அபிஷேகஞ்செய்து கண்டு தரிசித்ததும் உண்மையே? "சிங்கமேயுன்னடிக்கே போதுகின்றேன்" என்றதேவாரவுண்மைப்பொருள் இங்கும் வழங்குவதுமெய்யே? என்று - அவைகளில் வரைந்திருக்கின்றபடியே சொல்லத்துணிந்தனன்.

மேற்கண்ட தபாற்கடிதங்களில் கண்டிருக்கின்றபடி இப்புத்தகத்தின்கடையில் அச்சிடப்பட்டிருக்கின்றதையுங் கண்டுணர்க.

இராசதானியாய்விளங்குஞ் சென்னை சிறுவழக்குக்கோர்ட்டு ஞாயாதிபதியாகிய - இரங்கநாதசாஸ்திரியாரவர்கள் மருமகப்பிள்ளை பெரியஞாயஸ்தலத்தில் மொழிபெயர்ப்பவருமாகிய கிருஷ்ணசுவாமிசாஸ்திரியாருக்குத் தமையனுருமாகிய விரிஞ்சபுரம் அண்ணுசாஸ்திரியார் மருமகப்பிள்ளையாகியும், விளங்கும் பாண்டித்துவம் உடைய - நீலகண்டசாஸ்திரியர் ரவர்கள் தாங்கண்ட வேதவுபநிடத சாத்திரபுராணங்களில் உள்ளதை இந்நூலிற்காண்க.

இப்புத்தகம் அநேகருடைய திருப்த்திக்காகவே அச்சிட வேண்டியிருப்பதால், சென்னை கோமளீச்சுரன்பேட்டை, சாமி செட்டிவீதி (யஎ) வது, கதவிலக்கமுள்ள கிரகத்தில் - திருத் தொண்டர்சபைத்தலைவர்களில்ஒருவராகிய, சீ. வெங்கடாசல முதலியார், கோ. நே. கன்னியப்பாசாரியார், கோ. உருத்தி ரப்பாசாரியார், ஆகிய இவர்களால் செலவிட்டு அச்சியற்றிய தால்; புத்தகம்ஒன்றுக்குவிலை அணு இரண்டுகொடுத்து ஷை வீதியில், உய-வது, கதவிலக்கமுள்ளகிரகத்தில் அ. பெ. நாரா யணசாமி முதலியாரிடத்தில்பெற்றுக்கொண்டு இதனைஉள்ளப டிஅறிந்து மனத்தியக்கமில்லாதுவாழ்வதுமன்றி; நேரேகண்டு தரிசித்துஞ்சுகமாகவாழ்ந்திருப்பார்களென்றேகடவுளைமிகவும் பிரார்த்திக்கின்றனன்.—வருந்தொகையிற்செலவுபோக, மீதித் தொகையை - மேற்படிசபையார்களே - உபயோகித்துக் கொ ள்ளலாமென்பது கருத்தாகும். புராணீகரொனவழங்கும்.

இங்ஙனம்.

ஸ்ரீ பொ. சுந்தரம்பிள்ளை.

கஅளச ஹூ
டிசம்பர்மீ' ௨ ௨ க்குச்சரியான
பவ ஹூ
கார்த்திகைமீ' யகூ௨.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அசாம்பிரதாய நிரசன நிர்த்தூளி.

## விநாயகக்கடவுள் துதி.

மண்ணுலகத்தினிற் பிறவிமாசற ... ... *
எண்ணியபொருளெலா மெளிதின்முற்றிறக் ... *
கண்ணுதலுடையதோர் களிற்றுமாமுகப் ... *
பண்ணவன்மலரடி பணிந்துபோற்றுவாம் ... ... *

## நடேசர் துதி.

உலகெலாமுணர்ந் தோதற்கரியவ ... ... *
னிலவுலாவிய நீர்மலிவேணியன் ... ... ...*
அலகில்சோதிய னம்பலத்தாடுவான் ... ... *
மலர்சிலம்படி வாழ்த்திவணங்குவாம் ... ... *

## நூல்.

வடமொழிநூலில் வல்லவராகும், விரிஞ்சபுரம் - நீலகண்டசாஸ்திரியாரவர்கள் தாங்கண்ட வேதவுபநிடத சாத்திர புராணங்களிலுள்ள - உண்மைவிளக்கம்.

அதாவது, வேதத்தின்அந்தமாகிய வுபநிடதத்திற் கண்டிருக்கின்றபடி-மகாவிஷ்ணு ஒருகால் - நரசிங்காவதாரங் கொண்டு - இரணியனை சங்காரஞ்செய்தகாலத்து, அச்சிங்கமுக வழியே வுருத்திர சிவாம்சங்கொண்டே முடித்தனரென்பது உபநிடத நிச்சயப்பொருளாம். இதனால், அக்கடவுள் அயோனிசம்பந்தராய் தூணிலேதோன்றி நரசிங்கராய்நின்றது நமது

சிவமூர்த்தியேயாகும், என்பது - வேதநிச்சயமாம். மஹாவிஷ்ணு சத்துவகுணப்பிரகிருதி தத்துவமுடையவர். உருத்திரசிவமூர்த்தி தமோகுணப்பிரகிருதி தத்துவமுடையவர் என்பதனால் உயர்வுதாழ்வு கூறவேண்டிவருமேயெனின் - அப்படியன்று ; தருக்கசங்கிரகத்தில், திரவியம், குணம், கருமஞ், சாமானியம், விசேடஞ், சமவாயம், அபாவம் ; என்ற - சத்தபதார்த்தங்களுள் குணம் இரண்டுவகையாம். அவை விளங்காவெண்மை, விளக்கமானவெண்மையென்பனவாம். அவைகளுள் - அப்பு, விளங்காவெண்மை ; தேயு, விளக்கமானவெண்மையாம். அப்பு - தத்துவமுடையவர், மஹாவிஷ்ணு ; தேயு - தத்துவமுடையவர், உருத்திரசிவமூர்த்தியென்ற விடத்து - மஹாவிஷ்ணுவினுக்கு, முழுச்சத்துவகுண மில்லாமையுஞ் ; சிவத்திற்கு - முழுச்சத்துவகுண முண்டென்பதும் ; பொருளாம். இத்தருக்கசாத்திரவளவால் - இவ்விரண்டு கர்த்தாக்களுக்கு - மிரண்டுகுணமுளவாம்.

பின்னுஞ் - சொப்பனகருத்தா - மஹாவிஷ்ணு ; சுஷப்திகருத்தா - உருத்திரர் ; இவ்விருவரால், உயிர்கட்கு துக்க, சுக, முண்டென்பதை - நித்தியவனுபவ அளவாலுங்கண்டுணர்க. இஃது ; வேதசூத்திரம்.

సింహాది పతి జేయాది పతిరుద్రః||
சிம்மாதி பதிஜெயாதி பதிருத்திராஃ

என்றதனால் - தத்துவகட்டளைகளில்கூறியபடி உருத்திரமூர்த்தி தமோகுணங்கொண்டு சங்காரஞ்செய்து உயிர்கட்கு சுகம்வருவித்தல் - மறக்கருணையாம்? துல்லிய சத்துவகுணமொன்றால் சுகம்வருவித்தல் - அறக்கருணையாம்? இருகுணமொருகுணமென்பது - வெளிமுகஉண்முகத்திற் கண்டுணரக்கடவர். தமோகுணமொன்றால் - அக்கடவுளுக்கும், பிறஉயிர்களுக்கு, நஷ்டமில்லாதபடியால் ; அதுமுக்கியகுணமாயிற்று. எப்படியெனின் - தந்தை, புத்திரன்வழியேகொண்டகோபத்தால் - தனக்கும், புத்திரனுக்கும், நட்டஞ்சிறிதுமில்

லாது விளங்குவதுபோலாகும். சிங்கத்திற்கதிபதியாகியும், ஜயத்திற்கதிபதியாகியும், விளங்கப்பட்டவர் - உருத்திரமூர்த்தியென்பதனால் ; நரசிங்கத்திற்கும், ஆதாரமாகி அவர்செய்யத்துணிந்தஜயத்திற்குந் தாமே யாதாரமென்பது - முக்கியப்பொருளாம். இதனால் நமதுகடவுள் அயோனிசம்பந்த சிங்கமுகசொரூபரென்பது - வேதஉபநிடத முக்கியப்பொருளாம். நரசிங்க வேறுமதவபிப்பிராயத்தை யெடுத்தாளுங்கால். சிவாம்சங்கலந்த சமரசவேதப் பொதுப்பொருளாகுமன்றி - சிவாகமசம்பந்த சிறப்புவகையல்லவென்று வழக்கிடுவோருக்கு ; ஆகமசம்பந்த உருத்திரசம்மிதையில் - உத்திரபாகத்திலு முண்டென்பதை யிங்ஙனங்கண்டுணர்க.

அதாவது.—

మృగేంద్రరూప మాసాద్య - గజాసురమమర్థ్యయత్ |
గజేంద్రత్త్వంసమాస్థాయ - జనయామాసవైసుతం ||

மிருகேந்திர ரூபமாசாத்தியா - கஜாசுரமமர்த்தயத்து ⁕
கஜேந்திரத் துவம்சமாஸ்தாயா - ஜநயாமாசவைசுதம் ⁕

இந்தவடமொழி சுலோகப்பொருள்காணுமிடத்து முன்னாளில் - சிவமூர்த்தி சிங்கமுகங்கொண்டு கஜாசுரனைப் பயமுறுத்தி சம்மரித்தும் - கஜமுகங்கொண்டு கஜமுகக்கடவுளை வெளிப்படுத்தியுநின்ற சிவமூர்த்தியென்றதனால் - அக்கடவுளுக்கு - சிங்கரூபமுண்டென்பது முண்மையாம். இதனால், அக்கடவுள்கொண்ட சிங்கரூபத்திற்கு அழித்தல் மாத்திரமன்றி ஆக்கல், காத்தலும், உண்டெனக்கொள்க. ஏனெனில், அக்கடவுள் - முத்தொழிலுமுடையவராதலால், ரக்ஷகம் சிங்கமுகசுரூபத்திற்கும் உண்டென்பது முக்கியப்பொருளாம். அது ரூபகதியானவழிபாட்டிற்கும் ஏதுவாம். விருட்சஜாதியில் - கற்பகவிருட்சமாகவும். பசுக்களில் - காமதேனுவாகவும், சலத்தில் - கங்கையாகவும், மிருகங்களில் - சிங்கமாகவும் இருந்து விளங்குகின்றேமென்று மேற்குறித்த உருத்திரசங்கிதையில் உருத்திரமூர்த்தி உணர்த்திருப்பதும் உண்மையே ?

இதுபற்றியே, கடவுளைக்குறித்து பேசுங்கால் பூனையே புலியே என்றுபேசாமல் - சிங்கமென்று வேதஉபநிடத சாத்திரபுராணதோத்திரங்களிலும் பேசிஇருக்கின்றனவாம். இன்னும் - புராணவழியாலுங்கடவுள் சிங்கமுகசொரூபங் கொண்டது உண்டோவென்று விசாரிக்குங்கால், உண்டு. சைவபுராணமென்பதனுள் - சைவமென்னுஞ் சிவபுராணம், இலிங்கபுராணம், ஆனவிரண்டும் - ௩௰௫ஆயிரம், கிரந்தங்களையுடையது. அவைகளுள் சுவாமிகளுக்கு சிங்கமுகமுண்டென்று - வெளியிட்டிருப்பதை அப்புராணங்களிலிருந்துழிகண்டுணரக்கடவர்.

சேக்கிழார்சுவாமிகள்அருளிச்செய்த - திருத்தொண்டர்புராணமென்னும் பெரியபுராணத்துள் அப்பர்சுவாமிகள் திருப்பூம்புகலூருக்கெழுந்தருளி திருத்தொண்டுசெய்திருக்குங்கால் - சுவாமிகள் பிறர்உய்யும்பொருட்டு, அப்பர்சுவாமிகளை மணிசோதனை, ஸ்திரிசோதனை செய்தருளியபின்னுஞ் சிங்கமுகங்கொண்டுசோதித்து - அப்பர்சுவாமிகளையுட்கொண்டு - கண்டமட்டில்வைத்து வெளியிட்டுதற் சொரூபமாக்கிக்கொண்டனர் - என்பதற்கு, நீலகண்டசாஸ்திரியார் - தாம் பக்தவிலாசாதிகிரந்தங்களில் கண்டிருக்கின்ற ஆதிகிரந்தசுலோகார்த்த சொரூபம் இதுவாம்!

அதாவது —

శింహాననస్వయంభూత్వా శరణేశోమహేశ్వరః ।
అగ్రాసీత్తపస్యంతం మప్పాశఖ్యంకంఠమాత్రతః ॥
కృపయాపునరుద్వమ్య గళేవిషభయాచ్చుతం ।
తతఃస్వంరూపమాస్థాయ ప్రోవాచైనంశదాసివః ॥

சிம்ஹானனசுவயம்பூத்வாசரணேசோமஹேஸ்வரா
அக்ராசித்தபஸ்யந்தம்மப் பாசக்கியம்கண்டமாத்திரதஃ ॥
க்ருபயாபுநருத்வம்மிய களேவிஷபயாச்சுதம்
ததஃஸ்வம்ரூபமாஸ்தாய புரோவாசைநம்சதாசிவஃ ॥

மேற்குறித்த பக்தவிலாசாதிகிரந்தங்களுள் சொல்லாதுவிட்டசரித்திரஞாயங்களுஞ் சிலவுளவாம். அதுபோல்; சே

க்கிழார்சுவாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டர்புராணத்துள் வேண்டியதலபுராணவைதீகங்களை சிலதீ குறிக்காது விட்டிருப்பனவுமுள்ளவாம்.

மேற்கண்ட சாஸ்திரியாரவர்கள் வெளியிட்டிருக்கின்ற முக்கியபிரமாணநூற்படி - சிவபெருமான் அப்பர்சுவாமிகளை சிங்கமுகங்கொண்டு கண்டம்வரையில் உட்கொண்டானென்பதை அசாம்பிரதாயர் மறுக்கவல்லவராவரோ !

## திருக்குறள்.

தொட்டனைத்தூறு மணற்கேணிமாந்தர்க்குக்
கற்றனைத்தூறு மறிவு ... ... ... ...*

என்பதுபோலாவார்.

உ-வது, இதுநிற்க - சரணபுரமென்னுந் திருப்பூம்புகலூர் தலபுராணத்துள் - தசமுகன், சிவலிங்கங்கண்ட அத்தியாயத்தில், தருமபுரத்து ஆதீன சைவத்தம்பிரான் சுவாமிகள்கண்டுணர்ந்த செய்யுள்கள்.

## திருவிருத்தம்.

இரண்டினையடுத் தோங்குறுமா ... ... *
யிரத்திறுதியைப் பெறுஞ்சீர்த்தி ... ... *
திரண்டகாற்பிறைச்செய்கையே ... ... *
திறனெனத்தெரிந்தருளுருக்கொண்டு *
திரண்டெழுந்துயர்சிவலிங்கநாயகன் ... ... *
சிங்கமாமுகம்பெற்று ... ... *
வரண்டுருப்பெருங்கருணையாலப்பனை ... ... *
வாரிவாய்மடுத்துண்டான் ... ... *

என்றுரைத்திடுஞ்சூதமாமுனிவனை ... ... *
யிருடிகளினிதேத்தி ... ... *
நின்றருட்சிவகோசமைம்முகங்களாய்... ... *
நிமிர்ந்துமிப்புகலூரின் ... ... *
முன்னமாளுடையரசினைவிழுங்கவே ... ... *
முரணரிமுகங்கொண்ட ... ... *
தென்னெனத்தவமுனிவனுநிகழ்த்தின ... *
னெம்பிரான்றனைப்போற்றி ... *

பதியெனும் பொருளுரு வெழுத்தைந்தையும் *
பகுத்ததிற் பதிந்தோங்கும் ... ... *
பதியெழுத்தினைப் பயின்றிடும் ... ... *
பசுபதியாகுமப்பதிதானுய்க் ... *
கதியதாய்ப்பொருண்மூன்றதாய்ப் ... ... *
பொலிவதுகாணுறின்முழுத்துல்ய ... *
நிதியெனப்படுமொருமுகஞ்சிங்கமாய் ... *
நேர்ந்தருளியதென்றே ... ... ... *

( இம்முச்செய்யுளில் இருசெய்யுள் குளகம். )

பின்னுந்தம்பிரான்சுவாமிகள் சொன்னதாவது - பதியெழுத்தாகுஞ் சிவ்வெழுத்து சச்சிதாநந்த துல்யப்பிரகாசமாகி-அந்தர்ப்பவமாயருகி சிங்கமுகவடிவாய் விளங்கும். அவ்வெழுத்தொன்றுள் - முப்பொருளுண்டென்பதை எடுத்துரைக்கவல்லவர். அக்கடவுள் சிங்கமுகங்கொண்டது முண்மையேயாகுமென்றுரைக்கவல்லவராவாரொன்றதுங்கண்டுணரக்கடவர்.

ஸ்மஸ்கிருத இலிங்கபுராணசாரத்துள் ; பிரமவிஷ்ணுக்கள் சோதிவடிவாகிநின்ற - சிவலிங்கப்பெருமானைக்கண்டு தரிசித்து த்திசெய்தருளியசுலோகங்கள்.

నమోస్తుశివలింగాయ - శుద్ధలింగాయతేనమః,
నమోస్తుబుధలింగాయ - జ్ఞానలింగాయతేనమః;
నమోస్తువిజ్ఞాలింగాయ - జ్ఞస్తిలింగాయతేనమః,
నమోస్తుదివ్యలింగాయ - జ్యోతిలింగాయతేనమః;
నమోస్తుభవలింగాయ - భర్గలింగాయతేనమః,
నమోస్తుసత్వలింగాయ - రజలింగాయతేనమః;
నమఃప్రకృతిలింగాయ - తమోలింగాయతేనమః,
నమఃప్రధానలింగాయ - మహాలింగాయతేనమః;
నమోనిర్గుణలింగాయ - చిత్తలింగాయతేనమః,
మృకేంద్రరూపలింగాయ - బుద్ధిలింగాయతేనమః.

நமோஸ்துசிவலிங்காய - சுத்தலிங்காயதேநமஃ,
நமோஸ்துபுதலிங்காய - கியானலிங்காயதேநமஃ;
நமோஸ்துஞானலிங்காய - ஞஸ்திலிங்காயதேனமஃ,
நமோஸ்துதிவ்யலிங்காய - சோதிலிங்காயதேநமஃ;
நமோஸ்துபவலிங்காய - பர்கலிங்காயதேநமஃ,
நமோஸ்துசத்வலிங்காய - ரஜலிங்காயதேநமஃ;
நமஃப்ரகிருதிலிங்காய - தமோலிங்காயதேநமஃ,
நமஃபிரதானலிங்காய - மஹாலிங்காயதேநமஃ;
நமோநிர்க்குணலிங்காய - சித்தலிங்காயதேநமஃ,
மிருகேந்திரரூபலிங்காய - புத்திலிங்காயதேநமஃ.

என்று இன்னுமுளவாம்.

இதுநிற்க - தாயுமானசுவாமிகள் திருவருள்பொற்றேங்கும் - அருளையர், தமதுகுருவை பரமசிவமாவுள்ளபடிவுட்கொண்டுதுதிசெய்யும் "அருள்வாக்கியவகவலில் விளக்கியது காண்க."

வாதவூராளியை வரிசையாய்விழுங்கும் *
போதவூர்மேவுகற் பூரவிளக்கு *
சுகனாயகண்டத் தூவெளியெல்லாந் *
திகழவேகாட்டுஞ் சின்மயசாக்ஷி *

செழுந்தமிழப்பனை சிவலிங்கமாகி *
விழுங்கியஞான வித்தகவேழம் *
எழிற்றருபட்டினத் திறைவனையென்று *
மழிவிலாவிலிங்க மாக்கியவநாதி *

என்றுரைத்திருக்கின்ற வெமதுகுருசுவாமிகள் உண்மை வாக்கியமொன்றே சுவாமிகள் அப்பர்சுவாமிகளை விழுங்கி ஐக்கியமாக்கிக்கொண்டன ரென்பதற்குப் போது மானசாக்ஷியாகும்.

பின்னும் - கருணைப்பிரகாசசுவாமிகள் - இஷ்டலிங்க வகவல் ; திருக்காளத்திபுராணத்தில் - சீகாளத்திச்சருக்கம் வரையிலுஞ்செய்தருளி, வெங்கைமாநகரத்தில் (ம-அ-ம்,வயதில்) சிவலிங்கயிக்கமாய்ச் சமாதியானார் ; அப்போது - யாத்திரையாக வெழுந்தருளியிருந்துவந்த - சிவப்பிரகாசசுவாமிகள் செய்தருளியது.

## விருத்தம்,

முன்னமொருதமிழ்ப்புலவன் றனையுண்டுகண்டசுவை *
முதிர்ச்சியாலே ... ... ... ... *
தன்னியலே முழுதுமுனைத் தமையாமுன் னினைக்கவர்ந்து *
தடங்காளத்தி ... ... ... ... *
மன்னவனுண் டானெனது மாதவத்தின் வலிதீர *
மண்ணின்மீதே ... ... ... ... *
யென்னுடன்வந் தவதரித்த விளங்கருணைப் பிரகாச ... *
னென்னுங்கோவே ... ... ... ... *

இதுநிற்க - பின்னுஞ்சொக்கநாதப்புலவர்பாடியதிருவிருத்தம்

துப்பரையு மரகதத்தின் கொழுந்தரையு மொன்ருகத் *
துலங்குமெய்யா ... ... ... *
செப்பரிய புலியதளைத் தரிக்குமுத்த ராபதியிற் *
சிவனேநீதான் ... ... ... ... *
அப்பரையும் விழுங்கியொரு பிள்ளையுந்தின்ருற்ருய் *
லேயோவின்னுங் ... ... ... *
கப்பரையுங் கையுமாய்ப் புறப்பட்டாய் நல்லதிருக் *
காகூஷிதானே ... ... ... ...

அதுநிற்க.—

பொன்னம்பலவாணனே - முன்னமுன்றனைப்பாடும் *
புலவனை நீவிழுங்கும் - புதுமையைக்கேட்டிருந்தும் *

(என்று மாரிமுத்தாப்பிள்ளைபாடிய - கீர்த்தனம்.)

நிந்தாஸ்துதியானகாலத்தும், பொருளிருந்தன்ருே விள ங்கிற்று ; பொருள்இல்லாவிட்டால் விளங்குமோ ?

அதுநிற்க.—

மேற்கண்ட அநேகதிருஷ்டாந்தரங்களும் ஒத்தது போலவே - அப்பர்சுவாமிகள் பதிகத்தின் - இரண்டாவது செய்யுளுமொத்திருக்கின்றதாவது.

அங்கமேபூண்டாய் அனலாடினுய் ... ... ... *
ஆதிரையாய் ஆனிழலாய் ஆனேறூர்ந்தாய் ... ...*
பங்கமொன்றில்லாத படர்சடையினுய் ... ... *
பாம்பொடுதிங்கள் பகைதீர்த்தாண்டாய் ... ...*
சங்கையொன்றின்றியே தேவர்வேண்டச் ... ... *
சமுத்திரத்தி னஞ்சுண்டு சாவாமூவாச் ... ... *
சிங்கமேயுன்னடிக்கே போதுகின்றேன் ... ... *
திருப்புகலூர்மேவிய தேவதேவே ... ... *

என்ருர் - ஆகையால் ;

இப்போது வேத, ஆகம, சாத்திரங்களுக்கு ஒத்ததாக - இங்ஙனம், பிரமாணங்களை மேற்காட்டியிருக்கின்றனன்.

அதுநிற்க.—

திருப்பூம்புகலூர் ஆலயத்துள் கர்ப்பாகரத்தையடுத்த ஆவரணப்பிரகாரமூர்த்திசந்நிதியில், அப்பர்சுவாமிகள் பணிவிடைசெய்துக் கொண்டிருக்குங்கால் அச்சிவலிங்கமூர்த்தி ஞானசிங்கமுகங்கொண்டு அவரை ஐக்யஞ்செய்துக்கொண்ட திருவுருவம் இன்றுமிருப்பது உண்மையாதலால் ; நேரேகண்டு தெரிசித்துவாழலாம்.

இதுநிற்க.—

சென்னையில் - ஸ்ரீமுகவருஷ பங்குனிமீ 5ந்தில் திருவல்லிக்கேணியில், சற்சாம்பிரதாயசீலருக்குத் தொண்டுபூண்டொழுகும் - சைவப்பிரகாசசமாஜீயர்என்று தாமே நூதனப்பெயர்வகித்துக்கொண்டு, "அசாம்பிரதாய நிரசனமென்னும்" ஒருசிறுநூல் வெளிப்படுத்தியிருக்கின்றனர். அதனுள், சாத்திரப்பிரமாணக்கேள்வியில்லாத - அப்பிரமாணவார்த்தைகளுக்குச் சிறிதுமிடங்கொடாத ஞாயவார்த்தைகளை யிதனடியில் சொல்லத்துணிந்தனன்.

அதாவது.—

இன்னிலைக்கட்செறிந்திறுமாந்து தந்நிலைப்பாடுமுன்னிலைநோக்கம் பெறீஇப்பெறுவதூஉம், உறுவதூஉம், இற்றெனக்கடற்றிரைபோன் றிடையிட்டிலைப்புறுவிக் குமழிபொருட்கண்ணுமறச்சிறிதாய வணுத்துணையி னைக்கூற்றுயிரங்கூற்றுயவற்றினு மொவ்வாப்புணர்ச்சிக்கட்டதே யின்பெனப்பட்டாங்குணர்ந்துட்செறித்துச் செந்நிலைக்கட்சென்ற மெய்ந்நிலைப்புலவர் நன்னிலை யெங்ஙனமுணர்தற்காம்.

அங்ஙனமுணர்ந்த சேக்கிழார்சுவாமிகள் வெளியிடாத சிங்கமுகமொன்றை இவர் வெளியிடத்துணிந்தன ரென்றனர். பெரியபுராணத்துள் காட்டாதுவிட்டஞாயங்கள் அநேகமுள ;

எல்லாமெடுத்து எழுதப்புகின்மிகவிரியும் ஆதலின் சில்ஞாய ங்கள் எடுத்துக்காட்டுவன். அவைகண்டுணர்க.

---

அதாவது.—

கண்ணப்பசுவாமிகள் புராணத்துள் கடவுள்கண்ணப்பர் கையொன்றைப்பிடித்து வலப்புறத்திலிருக்கச்செய்துக்கொண் டனரென்று - சேக்கிழார்சுவாமிகள் முடித்தனர். திருக் காள த்திபுராணத்துள் கண்ணப்பர்சருக்கத்தில் அங்ஙனங்கடவுள் அக்கையொன்றைப்பிடித்துக்கொண்டபிறகு ;

## செய்யுள்.

குன்றவர்பெருமான்கையிற் ... ... *
கூர்ங்கணைவிட்டெறிந்து ... *
கன்றிளமடமானேந்துங் ... ... *
கண்ணுதலடிப்பூங்கஞ்சங் ... *
தன்றலைமிசைபுனைந்தான் ... ... *
சைவவேதிகனிறும்பூ ... *
தொன்றியவுளத்தனுகி ... ... *
யொருதனிமுதல்வற்ருழ்ந்தான் (௧எச)

மைதிகழ்மணிமிடற்று ... ... *
வார்சடையெம்பிரானைக் ... ... *
கைதவமிலாளைமிக்க ... ... *
கருணையங்கண்ணுேக்கி ... ... *
மெய்தழனடுவெணின்று ... ... *
விரிவறமனமொடுக்கி ... ... *
செய்தவர்தமக்குங்கிட்டாத் ... ... *
திருவுருக்கலந்துகொண்டான் (௧எரு)

---

என்றனர்.—

பெரியபுராணத்துள் கண்ணப்பருஞ், சிவகோசரியாருங், கலந்தவழி சொல்லாதுவிட்டகாரணந் திருக்காளத்தி புராணச் செய்யுளைக் கண்டுணரக்கடவர், ஆனல் சேக்கிழார்சுவாமி

கள் சொல்லாதுவிட்டதைப்பற்றி - தலபுராணத்திலுள்ளதைத் தவிர்க்கப்படுமோ! பெரியபுராணத்துள் இப்படியநேகமுளவாம். இன்னு முண்மையெடுத்துக்காட்டுவன் கண்டுணர்க. திருஞானசம்பந்தசுவாமிகள் - திருவெண்காட்டுப்பதிகத்துள்,

இரண்டாவதுபாடல்.

பேயடையாப்பிரிவெய்தும் பிள்ளையினோடுள்ளநினை
வாயினவேவரம்பெறுவரையுறவேண்டாவொன்றும்
வேயனதோளுமைபங்கன் வெண்காட்டுமுக்குளநீர்
தோய்வினையாரவர்தம்மைத் தோயாவாந்தீவினையே.

என்று அத்தலஜதீகப்பிள்ளைப் பேறுதந்தருளும் முக்குளநீரைக்குறித்துப்பாடியதுண்மையாகுமென்று பொருள்கொள்வதுபோலும்.

என் அப்பர்சுவாமிகள் திருப்பூம்புகலூரில் - உள்-ஆவரணத்தில் பணிசெய்துக்கொண்டிருக்குங்கால் அங்ஙனம்அமர்ந்தருளும் எனதுசிவலிங்கப்பெருமான் சிங்கமுகங்கொண்டு நிற்கக்கண்டு - சிங்கமேயுன்னடிக்கேபோதுகின்றேன் திருப்புகலூர் மேவியதேவ தேவே - எனப்பதிகமோதிநின்றுஐக்யமானகாரணம் யாவருக்கும் இப்போதும்விளங்கும்- அப்படிசிங்கமுகங்கொண்ட சிவலிங்கம்ஒன்று இருப்பதுஞ் சத்தியமாதலால் அப்பர்சுவாமிகள் தேவாரத்தமிழ்வேதப் பொருளொன்றே ஆதிமுழுப்பிரமாணமாகும் - தலபுராணமுதலிய நூற்பிரமாணங்களெல்லாம் ஆதியடுத்தமத்திமப் பிரமாணமாகும் என்றேபொருள்கொள்ளக்கடவர்

சிம்புள்வடிவுகொண்டெழுந்த சோணசைலனென்பதுசரபவடிவமாகும் அதனைவிரிஞ்சபுரத்தில்மேலண்டைகோபுரவாயற்படிக்கடுத்த ஓர்மண்டபத்தூணில் நேரேகாணுமிடத்துமுகமட்டுஞ்சரபமாகியும்மற்றையவுறுப்பெல்லாம் - மான்மழுபற்றி நிற்குந்தெய்வவுருவாகியும் - விளங்குகின்றது - ஆதலால் திருப்பூம்புகலூரில்சிவலிங்கக்கடவுள் திருவுருக்கொள்ளுங்கால் - சிங்கமுகமாத்திரங்கொண்டு விளங்குவதற்கொக்கும்.

அப்படியிருக்கசிங்கமேஎன்றபடி மற்றஎட்டுப் பாடல்களிலும் ஏன்சொல்லாதுவிட்டனர் - என்பதுகூடாது - தலைமையானசிங்கமுதங்கொண்டது சிவரகசியம் முத்திமுகமாதலால் அருமையாகஅதோவிடத்து குறித்துநின்றார் என்று அறிந்துகொள்ளக்கடவர்- அந்தநுட்பங்கண்டறியாது அப்பிரமாணமாகச்சொல்வதுமரபல்ல

ஆன்றோர்வழங்கிவரும் அருமைமொழியொன்றைக் கண்டோ! அல்லதுகேட்டோ! மாரிமுத்தாப்பிள்ளைசொன்னகுறிப்புமொழியைக்கண்டுணராது மூர்க்கரும்முதலையுங்கொண்டது விடா என்பது போற்கொண்டு அந்த மூத்தோர்சொல்லையும் மூடமாக்கிவிட்டனர், ஐயோ ! பெரும்பாவம்இவருக்கேனிந்த வீண்மதி

அதுநிற்க - கண்டதுபேசு - கேட்டதுபேசுஎன்பதைதப்பு என்றனர் - ஆ- ஆ - கெட்டி ! கெட்டி !! திருவாசகம் ஒன்றுங்கண்டவரும் அல்லர் - கேட்டவரும்அல்லர்போல்தோற்றுகிறது ஏனென்றால் - அத்திருவாசகம் ஒன்றில் - வெளிமுகப்பொருள்பேசுங்கால்கண்டது பேசுகேட்டதுபேசு என்னும்ஞாயங்களைத்தழுவியே மாணிக்கமூர்த்திகள் திருவாசகமுழுதும் பேசியிருக்க அதைக்கொஞ்சமேனும்பயமுற்று அறியாதவராய் இருக்கின்றார் திருவாசகத்தினுடைய சாம்பிரதாயம்ஒன்றைத்தெரிந்து கொள்ளாதவர் - மற்றசாத்திரபுராண சாம்பிரதாயங்களைஎன்னதெரியவல்லவராவார் திருவாசகம் 'மானேநீநென்னலைநாளைவந்துங்களை நானேயெழுப்புவன்' என்பதுதநுர்மாசத்தில் திருவண்ணாமலைப்பெண்கள் சொல்லக்கண்டு சொன்னமுறையாம் இஃதுகண்டதுபேசல். 'கீதமினியகுயிலேகேட்டியேலெங்கள்பெருமானே' என்றுகூவாய் உன்சம்மதப்படியே கூவவேண்டாம் என்றுசொன்னதுகேட்டதுபேசுதலாம். இதுபோலுங்கண்டதுபேசுதல் - கேட்டதுபேசுதல்தொன்றுதொட்டுவழங்குஞ் சத்தியமொழிகளாம் - அப்படியிருக்க கண்டதுபேசு கேட்டதுபேசு என்பதுபொய்திரவிசாரிப்பதுமெய்யென்று நாலுசந்திரிகதைகண்டு சொல்லத்துணிந்தவருக்கு என்ன

சொல்வாரிதுதெரியாதுவிட்டால்ஆதீனங்களில்கற்றுணர்ந்த தம்பிரான்களையாவது கேட்டு தெரிந்துகொள்ளக்கடவர்.

அதுநிற்க - 'இறுமாந்திருப்பன்கொலோ' என்றபதிகத்துள்சேவடியின் கீழ்ச்சென்றுஎன்பதைஇங்கெடுத்துக்காட்டவந்தனர் - இவர்மதிஎன்னமதி; இவர்முறைதெரிந்து சம்பந்தங்கலந்துவாழத்தெரியாத ஆண்பிள்ளைபோல் - தோற்றுகிறது. ஏனென்றால் அடியார்கள்ஆண்டவனடியைக்குறிப்பது அருளைமுன்னிட்டு முடியைக்குறிப்பது ஆநந்தத்தைமுன்னிட்டு சுவாமிகள் ஞானசிங்கமுகங்கொண்டு ஆநந்தவடிவாய்நின்ற அப்பர்சுவாமிகளைஆநந்தமுகவழியே வாழைப்பழம்போல் விழுங்கித்தன்மயமாக்கிக்கொண்டனர்என்பதாம். இஃது,அறியாதுபலநூற்பயிற்சி கேள்விச்செல்வமுடையவரைப்போலுந்துணிந்து 'சாவாமூவாச்சிங்கமே' என்பதற்குவாயில்வந்தபடிபொய்யுரையெழுதியிருக்கின்றனர். பொய்மையில்லாதஅப்பர்சுவாமிகள் இவருள்ளேபுகுந்துகொண்டு அறிவித்தனரோ! அல்லது இவரேசொல்லிவிட்டனரோ !! விளங்கவில்லை.

'மூவாச்சிங்கமே' என்றதனால் இப்போதும் அந்த சிங்கவடிவஞ் சிவலிங்கத்தினிடத்தே இருத்தல்வேண்டுமென்றனர். அவ்வுருவுடன் அப்பரும் அச்சிங்கவாய்வழியே இருக்கக்காணவேண்டுமென்றுஞ்சொல்லவேண்டியவர் மறந்தார்போலும்.

அதுநிற்க - பிறர்உய்யும்பொருட்டு சிங்கமுக வுருக்கொண்டு அப்பரைப்பயமுறுத்திநிற்பதுபோற்காட்டி யுட்கொண்ட அக்கோலத்தோடும் உள்ளபடி நம்பி வரலாற்றில்அளவிட்டிருக்கின்றபடிபசும்பால்கொண்டு அபிடேகஞ்செய்துஇன்றுங்காண்பதுசத்தியமே அப்படிவுட்கொண்டவுண்மைநெறியை அறியாமல் 'நாமார்க்குங்குடியல்லோம்' என்றபதிகத்தையெடுத்தாளவந்தஇவர்மதிபின்மதியாகும். ஆதலால், அப்பர்சுவாமிகள் உண்மைக்கலப்பைஇனியாவது அறிந்துகொண்டு அடுத்தவர்க்கும்யோதிப்பரென்றேதுணிந்து சாஸ்திரியாரவர்கள் எடுத்துக்காட்டிய சாத்திரபிரமாணங்களையும் அநுபவப்பிரமாணங்களையுந்தழுவிமுடித்ததாகும்.

அப்படிதழுவிப்பேசாமல் அப்பிரமாணங்களைப் பேசத் தொடங்குமவர்களுக்கு வருங்கதி.

( பிரமோத்திரகாண்டம். )

## விருத்தம்,

அன்றிக்கேட்குமிடத்தழுக்காற்றினுற் *
கன்றிவேருேர்பொருளினைக்கற்பிப்பார் *
ஒன்றலாததுரைத்தெதிர்வாதிப்பார் *
பன்றியாயிந்தப்பாரிலுதிப்பரே *

என்பது இவருக்கேயாம். ஆகிலும் ஓர்விவகாரத்தை யெடுத்துப்பேசப்புகின்.

## திருக்குறள்.

வினைவலியுந்தன்வலியுமாற்ருன்வலியுந்
துணைவலியுந்தூக்கிச்செயல் *

என்பதுபோல் ஒருவருடைய வலியறிந்தன்ருே ஓர் விஷயத்திற்பிரவேசிக்கவேண்டும்; அப்படிதுணிந்தகாலத்தும்

## திருக்குறள்.

எப்பொருள்யார்யார்வாய்க்கேட்பினுமப்பொருண்
மெய்ப்பொருள்காண்பதறிவு *

என்னுந்திருக்குறளுண்மையும் அறியாதுவீண்பிரசங்கத்திற்கு இவர் ஏன்தலையிட்டுக்கொண்டனர். ஐயோ கொடுமை? கொடுமை?

இதுநிற்க தாமேபுராணிகரென்றுபெயர்வைத்துக்கொண்டார் சூதமுனிவருக்குப்புராணிகர்பட்டமல்லது இவருக்கேது என்றுசொல்லப்புகுந்தனர். சூதரிஷிக்கு புராணிகர்பட்டமேது. தெருப்பிரசங்கிகள் சூதபுராணிகரென்றுசொல்லிவழங்கிவரும்வார்த்தையாம். அப்படி வழங்குமாயினும் புராணஞ்செய்ததனுல் வந்தபெயராகுமாஞல் புராணத்தை அடியாகக

கொண்டஆசிரியருக்குப்பேர்வழங்கவேண்டும்;அப்படியில்லை. தொல்காப்பியங்களைக்கற்றதனுல் தொல்காப்பியர்என்பதுபோல் ஆதல்வேண்டும். அப்படியுமின்றி, சூதனென்றும், புராணிகனென்றுந் தொடர்மொழிகளாகவிளங்குகின்றபடியால் ஆகாவாம் அவர்புராணகதைகளை ரிஷிகளுக்குச்சொன்னதனுல் புராணிகனென்றுபெயர்வந்ததாகும். அதுபோல புராணகதைகளைப்பிறருக்குச் சொல்லிவருகின்றதனுல் புராணிகர் என்றுபிறர்சொல்ல வழங்கிவந்தவார்த்தையாகும். அவதானஞ்செய்யப்பட்டவர்,அவதானி ஓதப்பட்டவர்,ஓதுவார்.என்பதுபோல், அதுவும்ஓதற்றொழிற்பெயராகும்செய்தற்றொழிற்பெயராகாவாம்

இனியாவதுஇவர்இவைகளைக்கண்டுணர்ந்து பலநாட்பட முயன்று இச்சென்னைமட்டும்பழகாது தென்றிசையிற் சிலநாளாகினும் பழகிப்பேசியடங்கிநிற்கக்கடவர்.

ஐயோபாவம்? இவர்என்செய்வர். இவரைஅறியாதுவெளிப்பட்ட அகம்பாவத்திற்கு இவர்தான் என்செய்வர். எவர்தான்என்செய்வர், இவர்இந்தப்படி ஒருவர்மேற்குற்றங்கூறி எனதுஅப்பர்சுவாமிகளைப்புகழ்ந்ததுபோல் புகழத்துணிந்த இவர்தோத்திரப்பதிகத்துள்ளும் நான்காவதுபாடலில், நானென்றெழுந்த நாணமில்லாதவர்க்கு நானென்செய்வேன்! அதாவது 'துள்ளுமனப்பேயொழிய' என்னும்பாடலில் ஏகாந்தவாழ்வினர்தம் ஏவல்செய்யும். உள்ளமுடையேன், என்று தன் அன்பைத்தானேவியந்துகொண்டதலையெடுப்புடையதயாநிதிக்குதாரணியிலுள்ளவர்யார்தானிகர் இவர் அன்பைஇங்ஙனம் எடுத்துஆளவேண்டுமோ! ஆண்டால்தான் ஆண்டவர்க்குவிளங்குமோ! தன்னையாண்டஅப்பர்தன்னைப்போலுஞ்சிற்றறிவுடையனென்றுசொல்லத்துணிந்தனரோ! ஐயோபாவம்? ஒருவர்மீதுகுற்றஞ்சொல்லப்புகுந்தஅவசரம், அப்பர்சுவாமிகள் துதியிலும் புகுந்துகொண்டதேயென்ற எனதுதுக்கத்தைஇவர் என்றுஆற்றுவரோ? ஐயோபாவம்?

திருவிளையாடற்புராணத்தில் நற்கீரதேவர் துதிசெய்தருளியபாடல்.

மறையினந்தமுந்தொட்டாததாணிலந்தொடவந்த *
நிறைபரஞ்சுடர்நிராமயநிருத்தற்குப்பிழைத்தேன் *
சிறியகேள்வியோர்கழியவுஞ்செருக்குடையோரொன் *
றறிஞர்கூறியபழஞ்சொலென்னளவிற்றேயம்ம *

என்றதுஇவருக்கேசாகூடியாம்.

அதுநிற்க - முன்குறித்ததருமபுரந் தம்பிரான்சுவாமிகள் சொன்னதாவது, பெரியபுராணஞ் சொல்லப்புகுந்தவர்கள் தலயாத்திரைசெய்தவர்களாகவுந் தலபுராணங்கண்டவர்களாகவும் அத்தலபுராணமுதலிய கேள்விச்செல்வமுடையவராகவுஞ் சைவசாம்பிரதாயம் ஆட்சி ஐதிகங்கள் அறிந்தவர்களாகவும் இருத்தல்வேண்டும். அப்படியில்லாது சிறிது இலக்கியவிலக்கணங்கண்டதுணிபாற் சொல்லப்புகின் சிறிதும் பெருமையடையார் என்றனர்.

அப்படிஇவ்வசாம்பிரதாயர் அறிந்தவரார்யின், இதனடியிற்குறித்தஎமதுகேள்விக்குப்பதிலுரைக்கக்கடவர்.

அதாவது.

க. பெரியபுராணஞ்சொல்லப்புகுந்த சேக்கிழார்சுவாமிகளுக்கு - உபமன்னியபுராணம் முதலியசம்ஸ்கிருத உபபுராணங்கள்முதநூல் ஆகாமல் திருத்தொண்டத்தொகையும் நம்பியாண்டார்நம்பியந்தாதியும்ஆனவாறென்?

உ. சேக்கிழார்சுவாமிகள்இரண்டாவதுகாண்டமென்று பேரிட்டதற்கு ஆதாரம்என்?

௩. சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குப் புதுப்பிணிவந்தகாரணமென்? அப்புதுப்பிணியெவ்வகைப்பிணியாகும்?

௪. சேக்கிழார்சுவாமிகள் பெரியபுராணத்தின்முதலில், உலகெலாமென்றெடுத்து ஈற்றில் உலகெலாமென்று முடித்தகாரணமென்?

மேற்கண்ட இந்நான்குவினாக்களுக்கு சைவஆதினத்தார்கள் சம்மதிக்கும்படியான ஞாயங்களுடனே விடைசொல்லத் துணிந்தால் அவர்கள்ஆனமட்டும் புராணிகராவாரென்றுமுடித்தனர் - ஆதலால்சுவாமிகள்சொன்னபடிவெளிப்பட்டு சீக்கிரம் ஆனமட்டும் புராணிகர்பட்டங் கட்டிக்கொள்ளக்கடவர்.

மெய்யுடையொருவன்சொல்வன்மையினுல்
மெய்போலும்மே மெய்போலும்மே

என்னும் அறிஞர்வாக்கியப்பொருளைக்கண்டறிந்தவர்கள் இனியாவதுசைவப்பிரகாசசமாஜியர் - அவர்தலைவர் புலம்புவதெல்லாம் - ஊமையனுக்கு உளறுவாயன் உற்பாதபிண்டம் - என்பதுபோலுமெனக்காணக்கடவர். இதுநிற்க

திருக்குறள்.

உலகத்தாருண்டென்பதில்லென்பான்வையத்
தலகையா வைக்கப்படும்.

என்ற திருக்குறளுக்குஇவரேஇலக்கியமாய் இருப்பதல்லாமல்-இவருக்கினிப்பேய்வடிவம் உண்டாகுமேயென்னும்-வருத்தம் - என்னைவிட்டுநீங்கவில்லையேயென்செய்வேன்!! இவருக்குஇந்தவிபரீதபுத்திவந்தவழி விசாரிக்குங்கால் முறைப்படிஒருவரையடுத்து சிவபுராணங்கேளாதகுறையால் - வந்தகுறையேயாம் - ஆகலின்காசியில்முத்திமண்டபத்தில் - வியாசமகாமுனிவர்இருந்தகொண்டுகைகாட்டி கடவுளொன்றை ஒன்றாகக்கூறியவதனுல் - அவருக்குவாய் அடைந்துங்கைநீண்டும்போனதுபோல் - நன்றாகவிசாரியாமல் சிங்கமுகங்கொண்டு அப்பர்சுவாமிகளை விழுங்கியதுஇல்லைஎன்றவாயினுக்கும் அதனைச்சிறு அச்சிற்பதிப்பித்து வெளியிடத்துணிந்த சேட்டையுடைய சிறுகையினுக்கும் பின்னம்வாராதிருக்கும்படி அப்பர்சுவாமிகளைமிகவும்பிரார்த்திக்கின்றேன் இவருக்குத்துணைப்பட்டசகாயருக்குந்துன்பம்வாராதிருக்கும்படிஎன்அப்பருக்குஅப்பனைமிகவும்பிரார்த்திக்கின்றேன்.

என்றுமின்பம்பெருகுமியல்பினு
லொன்றுகாதலி னுள்ளமுமோங்கிட
மன்றுளாரடி யாரவர்வான்புகழ்
நின்றதெங்குநிலவியுலகெலாம்.

முற்றிற்று.

உ

## சிவமயம்.

இஃதுமேற்கண்டசரித்திரச்சுருக்கத்திற்கண்டபடி தபால் கடிதங்களின் விபரமென்றறிக.

சேலம் சில்லாகோர்ட்டுவகில் - அப்பாவுபிள்ளையவர்கள் மரபில்வந்த மண்டிவெங்கடராமபிள்ளையவர்களுக்கு - திருப்பூம்புகலூருக்குஅடுத்த திருவாரூர் நாராயணபிள்ளையெழுதிய கடிதமாவது.

சிரஞ்சீவி வெங்கடராமபிள்ளைக்கு எல்லாநன்மையும்பெருகஉண்டாகதாக. நாளதுமீ உ௪உ வரைக்கும்இவட்டம்க்ஷேமம் - அவட்த்தியக்ஷேமங்களுக்கு எதிர்பார்க்கிறேன்.

சி - ஆறுமுகம்பிள்ளைக்கு நீரெழுதியகடிதத்தி லடங்கியசமாசாரமறிந்தேன். நீரெழுதியசந்தேகங்களையிவட்த்தில் - திருக்கூட்டங்களையுந் தியாகராசவோதுவார் சந்ததியார்களையும் விசாரிக்க தெரியவருகிறதாவது :—

புகலூரில் அப்பனை இலிங்கத்திலிருந்து - சிங்கருபமாக யெழுந்தருளி அவனைஆபானம்பண்ணிக்கொண்டார் - அந்தரூபமுடன் ஒருலிங்கமிருக்கிறது அதற்கு பூசைநைவேத்தியமில்லாமல் அக்கோயிலின்பிரகாரத்தின்ஒருபுறத்திலிருக்கிறது சேலமண்டபத்தில் சிற்பிகள் ஷெ ரூபமுடன் எழுதியிருக்கிறார்கள் அதுபிரமாணஐதீகமென்றார்கள். இக்காலத்திலும் அப்பரடைந்தவண்ணம் - உண்மையாய் தெரிசனஞ்செய்யவேண்டுமென்றால் - ஒருநிறமுள்ளபசுவின்பால் ஏககாலத்தில் (௧உ௫) கலப்பால் அபிடேகஞ்செய்வோமாகில் சுவாமிகளடைந்தபிரகாரம் தோற்றப்படுமென்று இவடத்தில்பெரியோர்கள்சொல்லுகிறார்கள். இதுதங்கள்சித்தமறிக.

பவ௵ ஐப்பசிமீ - உ௩உ. | இன்னங்கம். நாராயணபிள்ளை

உ

சிக்கல் கீழ்வேளூரிலிருந்து சட்டைப்பிள்ளையவர்கள் சுந்தராநந்தம்பிள்ளைக்கு எழுதியகடிதமாவது ;—

இயான்போய்ப்பார்த்துபின்னிட்டு பரிஷ்காரமாயெழுதுகிறேன், தற்காலகேள்வி - உட்பிரகாரத்திலே ஓவியத்தினல் சிங்கமுகங்கொண்ட இலிங்கமெழுதியும் சிங்கமுகங்கொண்ட

பாணலிங்கமும் அத்தலபுராணத்தில் ஒரேவிதமான ஆவின் பால் ஒருமுகூர்த்தத்தில் (க0) கலப்பால் அபிடேகஞ்செய்தால் அப்பரமைந்தபிரகாரஞ் சிங்கமுகத்தோடுசிவபெருமான் தெரிசனமாகுமென்று சொல்லியிருப்பதாயுஞ்சுமார் அ0-வருடத்திற்குமுன்ஒருபெரியவர் அபிடேகஞ்செய்துசிங்கமுகத்தோடுசடையுள்ள தெரிசித்ததாயும், புகலூர் அப்பர்சுவாமிகள் பதிகத்தில் உ-வதுசெய்யுளில், 'சிங்கமேயுன்னடிக்கேபோதுகின்றேன்' என்றுபாடினதும் உண்மையாய் சிங்கமுகத்தைக்குறித்ததாமென்றுஎல்லோருஞ்சொல்லுகிறார்கள் இதுதாங்களறியவும்,

பவஷூ இங்ஙனம்.
ஐப்பசிமீ - உச்வ், கட்டளைப்பிள்ளை.

இப்புத்தகப்பொருளைக்கண்டுதெளியாது பொறாமைகொண்டு பின்னுஞ்சிறுபுத்தகம் வெளியிடத்துணிந்தவர் திருப்பூம்புகலூருக்குச்சென்று அங்குள்ளசிங்கமுகங்கொண்டசிவலிங்கத்தையுந் தலபுராணத்தையுங்கண்டு அறிஞரைக்கேட்டுத்தெளிந்து பின்வெளியிடக்கடவர். இவ்வளவுங்காணாது சிறுபுத்தகம் வெளிப்படில் இந்நூலடியே அதமாகிப்போவதுமன்றி யான் பின்னும் புத்தகம்வெளியிடாதிருப்பதுநிச்சயம்.

## பிழைதிருத்தல்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| க | ரு | இன்னூல் | இந்நூல் |
| சு | ச | களில்ஒருவராகிய | களாகிய |
| அ | கசு | சுஷப்தி | சுழுப்தி |
| ,, | உஎ | உயிர்களுக்கு | உயிர்களுக்கும் |
| க0 | உஉ | అగ్రాన్సీత్ | అగ్రసీత్ |
| ,, | ,, | మహావాశ్ఖ్యం | మహావాఖ్యం |
| ,, | உசு | அக்ரா | அக்ர |
| ,, | ,, | மப்பாசக்கி | மப்பாக்கி |
| கரு | கூ | ఙ్ఞాన | జ్ఞాన |
| ,, | ரு | ఙ్ఞస్తి | జ్ఞస్తి |
| ,, | உஉ | பொற்றேங்கு | பெற்றேங்கு |
| ,, | உரு | வுட் | யுட் |